1981 ஜனவரி 29]

திரு. செ. சிவசாமி: வாலிநோக்கம் பகுதியிலே இயற்கையிலேயே ஒரு பெரிய குடா இருக்கிறது. அந்தக் குடாவை அபிவிருத்தி செய்தால் நூற்றுக்கணக்கான படகுகளை இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகிற நேரத்திலே கூட நிறுத்தலாம். ஆகவே அதை அபிவிருத்தி செய்கிற வேலையை சீக்கிரமாகச் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது வாலிநோக்கத்திலே அமைக்கப்பட இருக்கிற துறைமுகம் பற்றியதாகும். இந்தத் திட்டம்தான் இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் வந்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

சைதாப்பேட்டையில் அமுதம் அங்காடி

*வினா எண். 83—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சைதாப்பேட்டையில் அமுதம் பல்பொருள் அங்காடி திறப்பதற்கு செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. து. புருஷோத்தமன்: சைதைப் பகுதியில் உள்ள கோட்டூர்புரம், வடுவன்கரை, ஜான்ஸ் சாலை ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்காக அமுதம் பல்பொருள் அங்காடி திறக்க வேண்டுமென்று பல்வேறு மனுக்கள் தரப்பட்டு இருக்கின்றன. எனவே மீண்டும் பரிசீலனை செய்து அது திறக்கப்படுமா? பொதுவாக பல்பொருள் அங்காடிகளில் "பாம் ஆயில்" இல்லை எனப் புகார் வந்து உள்ளதே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அமுதம் பல்பொருள் அங்காடி, சைதாப்பேட்டைக்கு அருகில் உள்ள தெற்கு உஸ்மான் சாலை, ஆரியக் கவுடர் சாலை, அசோக் நகர் போன்ற இடங்களில் ஏற்கனவே இயங்கி வருகின்றன. ஆனால் ஒரு அமுதம் அங்காடி இயங்க வேண்டுமென்றால் மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்காவது விற்பனை ஆகவேண்டும். சைதாப்பேட்டைக்கு அருகில் இருக்கின்ற இந்த தெற்கு உஸ்மான் சாலை, ஆரியக் கவுடர் சாலை, அசோக் நகர் ஆகிய இந்த மூன்று இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்ற அமுதம் பல்பொருள் அங்காடிகளில் இந்த இலக்கையே நிறைவேற்ற முடியாத அளவிற்கு குறைவாகத்தான் அங்கே இருக்கிறது. ஆகவே, பக்கத்திலே இருக்கின்ற சைதாப்பேட்டையிலே மற்றொன்றையும் திறக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற குறிப்பு இருக்கிறது. இப்பொழுது சைதாப்பேட்டையில்

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக 7 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சைதையில் மற்றொரு அமுதம் அங்காடி திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்காவது விற்பனையாக வேண்டுமென்று கூறினார்கள். பொதுவாக அங்கே இருக்கின்ற சில அங்காடிகளில் பாமாயில், மண்ணெண்ணெய் போன்றவை குறிப்பிட்ட அளவிற்கு, ஒதுக்கப்பட்ட அளவிற்குக் கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. நீண்ட கியூ நின்றால் ஐந்தாறு பேர்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டு ''பாமாயில்'' இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். பொதுவாக, விற்பனைக்கு வருகின்ற மொத்த பாமாயிலும் விற்பனை செய்யப்படுகிறதா, எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது என்று கண்டறிய அரசு முன்வருமா? இதுபோன்ற அத்தியாவசியப் பண்டங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை என்பதை ஆராய சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அங்காடிகளில் ஒரு இலட்சம் ரூபாய்க்காவது மாதத்திற்கு விற்பனை ஆக வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்று அத்தியாவசியப் பண்டங்கள் மக்கள் விரும்பியும் விற்கப்படாத சூழ்நிலை இருக்கிறது என்ற குறைபாடுகள் இருக்குமேயானால் அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அமுதம் பல்பொருள் அங்காடிகளைத் திறப்பதற்காக, அதாவது அமைக்கப்படுவதற்காக விதிமுறைகள் ஏதேனும் அரசு வகுத்துள்ளதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமுதம் பல்பொருள் அங்காடிகள் நிறைய நடந்து கொண்டிருக்கின்றன. இனிமேல் விதிமுறைகளைப்பற்றிக் கவலைப்பட்டு என்ன செய்வது?

(பதில் இல்லை)

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ரேஷன் வாங்க ''பேஷன்ஸ்'' வேண்டுமென்ற அளவிற்கு இன்றைக்கு நீளமான கியூவாக ரோட்டைத் தாண்டிக் கூட நின்று கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ரேஷன் கடை அல்லது நியாய விலைக் கடையிலும் இத்தனை கார்டுகள் தான் இருக்க வேண்டுமென்று வரைமுறைகள் வைத்து, அதிகமான கார்டுகளைப் போட்டு அவதிப்படாமல் செய்வதற்கான திட்டத்தை வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1981 ஜனவரி 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு கடைக்கும் இவ்வளவு கார்டுகள் இருக்க வேண்டுமென்று வரைமுறைகள் இருக்கின்றன. ஆகவே, அதிகமான அளவிற்கு இருக்கிறது, நிலைமைகளைச் சமாளிக்க முடியவில்லை என்ற நிலை வருகிறபொழுது மேற்கொண்டு நியாய விலைக்கடைகளைத் திறக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் அதைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பொழுதே வரைமுறை இருக்கிறது, இவ்வளவுதான் ஒரு நியாயவிலைக் கடை தாங்கும் என்றால் அந்த அளவிற்குக் கார்டுகள் ஒதுக்கப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தென்னைநார் ஏற்றுமதி

*வினா எண். 84—திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தென்னை நார் (மூலப்பொருட்கள்) வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், மூலப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப் படுவதை தடை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.
(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் இருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற இந்தத் தேங்காய் நாரை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்பதற் காக குமரி மாவட்டத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு கொண்டுவந்து மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்படுவதாகவும், மேற்கு ஜெர்மனியிலிருந்து அது வேறு பொருட்களாக மாற்றப் பட்டு மீண்டும் நம்முடைய மாநிலத்திற்கும் இதர மாநிலங் களுக்கும் பெறுவதால் அதனால் நாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு தேவையான மூலப்பொருள் கிடைக்காமல் ஆகிறது. கயிறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சங்கடம் ஏற்பட்டு கயிறு தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு வேலையில்லாத நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்தி லிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டு இருந்தால் அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனப் படுத்திய விவரத்தை அரசு கவனத்தோடு கவனிக்கும்.